[1973 மார்ச் 14

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆராய்ச்சியின் மூலமாக புகையிலை வளர்ச்சியையும் அதிகரிக்க முடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக பல திட்டங்களை அரசு—மத்திய சர்க்கார்கூட ஓரளவு உதவி செய்து வருகிறது—மேற்கொண்டுள்ளது. பல திட்டங்கள் அமலில் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களையும் இன்னின்ன முறையில் புகையிலை வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY : In the answer given by the Hon. Minister for Agriculture, he has stated that Dharmapuri is well suited for growing this virginia tobacco. As it is, the Excise Duty levied on tobacco is 10 times of the cost of tobacco.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு, இது வேறு. புகையிலை என்பதால் அதன்மேல் இருக்கும் வரியைப்பற்றியெல்லாம் கேள்வி கேட்பது முறையல்ல. இது ஆராய்ச்சிப் பற்றித்தான்.

EHIRU B. NENKATASWAMY : It is huupering the production.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, புகையிலையை வாயில் போட்டு அடக்கிக் கொண்டால் கேன்சர் போன்ற நோய்கள் வருவதாகக் கூறுகிறார்களே, அரசாங்கம் இந்தச் சாகுபடியை உற்சாகப் படுத்துவதால் மேலும் அது பரவும் என்பதால் மேற்கொண்டு அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் அப்படியே விட்டுவிடலாம் அல்லது வெளிநாட்டிலே உபயோகிப்பவர்களுக்காக மட்டும் உற்பத்தி செய்யலாம்.

(விடை இல்லை.)

முத்துரெங்கம்பட்டி ஊராட்சி.

*427 வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்து தலைவரிடமிருந்து பிப்ரவரி 1972-ல் பொது மக்களுக்கு சாலை வசதி, குடி நீர் வசதி செய்து தரவேண்டி நிதி உதவி கேட்டு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

1974 மார்ச் 14]

(இ) 1973-74-ம் ஆண்டிலும், 1974-75-ம் ஆண்டிலும் கிராமப் பணித் திட்டத்தின்கீழ் சாலை மற்றும் குடிநீர் திட்டத்தை முத்துரெங்கம் பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் செயல்படுத்த கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் எடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு இந்த ஆண்டு அந்த வேலைத்திட்டம் முடியும் நிலையில் இருக்கிறது.

பார்வதிபுரம் பகுதியில் குடிநீர் வழங்கல்.

*428 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி நகரம், பார்வதிபுரம் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்க வேண்டி பொதுமக்களிடமிருந்து 1973 செப்டம்பர் மாதத்தில் நிர்வாக அதிகாரிக்கு மனு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) பார்வதிபுரம் பகுதியில் உள்ள கேணிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வரண்டு இருந்தமையால் தாற்காலிகமாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும் பொருட்டு அதன் அருகாமையில் உள்ள தா. பேட்டை ரோடில் உள்ள தண்ணீர் போதிய வசதி உள்ள பெரிய கேணியில் தண்ணீர் இறைத்துக் கொள்வதற்கு ஏற்ப நான்கு மர உருளைகள் பொருத்தப்பட்டு குடிமக்கள் தண்ணீர் தாராளமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முசிறி பேரூராட்சி எல்லைக்குள் காவேரியிலிருந்து குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் சம்பந்தமாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை ரூபாய் 1,31,250 மதிப்பீட்டில் திருச்சிராப் பள்ளி கோட்டப் பொறியாளரினால் மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடந்து கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட வேலை முடியும் தருவாயில் உள்ளது. பார்வதிபுரம் பகுதியில் உள்ள கேணியில் தண்ணீர் இல்லாமலிருப்பதால்